## 4.1 எப்போதும் சந்தோஷமாயிருங்கள்

**வேத வசனம்:** கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். பிலிப்பியர் 4:4

**அறிக்கை:** கர்த்தருக்குள் மகிழ்ச்சியே எங்கள் பெலன்

**சத்தியம்:** உலகத்தில் உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கர்த்தர் சொன்னார். ஆகையால் நாம் எப்போதும் மகிழ்ந்திருப்போம்.

### பாடக்குறிப்புகள்

* **உலகத்தில் உபத்திரவம் உண்டு** - *யோவான் 16:33*
* **உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தம் உண்டு** - *சங். 16:11*
* **கர்த்தரை விசுவாசிப்பதில் ஆனந்தம்** -*1 பேதுரு 1:8, ஏசாயா 61:3*
* **உற்சாகமுள்ள இருதயம் நல்ல மருந்து** - *நீதி 17:22*
* **மகிழ்ச்சியுள்ள மனுஷன் பலவானாய் இருப்பான்** - *நெகே 8:10*

**வேதப்பகுதி**
*2 கொரிந்தியர் 8:1-5*

### ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *துன்பத்தில் மகிழ்ச்சியாருப்பது எப்படி?*
- *பெரிய தோல்வி/ஏமாற்றம் ஏற்பட்டபோது எப்படி எதிர்கொண்டீர்கள்?*
- *மகிழ்ச்சியாய் இருப்பது குறித்து பிலி.4:4 என்ன கூறுகிறது?*

### கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நம்முடைய பெலன்

துன்பப்படுகிற நேரத்திலும் மகிழ்ச்சியாயிருக்கலாம் என்பது சாத்தியம்? ஆகிலும் தேவனாலே எல்லாம் கூடும் (மத். 19:26). நாம் தேவனை விசுவாசிப்பதினால் நமக்குப் பெரிய மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார், "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்துச்சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்திருக்கிறீர்கள்". நம்முடைய வேதனைகளுக்குப் பதிலாக நமக்கு சந்தோஷத்தைத் தர தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். இயேசு சிலுவையிலே பெற்ற வெற்றியால் நம்மால் எப்போதும் சந்தோஷமாயிருக்க முடியும். இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும்போது இந்த ஜெயத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.

**செயல்**

**இருதயத்தை மகிழ்ச்சியாய் வைத்திருப்பது அவரவர் தெரிந்தெடுப்பு. அடுத்த முறை ஏதாவது ஒன்று உங்களை விழத்தள்ளும்படி இழுக்குமானால் இயேசுவின் மீது உங்கள் கவனத்தை வையுங்கள்.**

**சிந்திக்க:**

*இருதயத்தில் சந்தோஷமாயிருக்கும்படி நாம் தெரிந்துகொள்வது இயேசுவின்மேல் விசுவாசத்தை எப்படி விளக்குகிறது?*

______________________________

______________________________

**ஜெபம்:**

*சந்தோஷத்தை அனுபவிக்க இருதயம் எப்பொழுதும் திறந்திருக்க ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.*

______________________________

______________________________